VIRAKESARI
வீரகேசரி
THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
6 December 2009

# நாம் இழந்த கல்வியை மீண்டும் பெற புலம்பெயர்ந்த மக்களின் ஆதரவு அத்தியாவசியம்

## - லண்டனில் பேராசிரியர்

உள்நாட்டு யுத்தம் காரணமாக நமது பிள்ளைகளின் கல்வி பெரும் பாதிப்படைந்திருப்பதையும் பாடசாலைக் கட்டிடங்கள் அழிக்கப்பட்டு மர நிழல்களிலும் திறந்த வெளிகளிலும் பெரும் சிரமத்தின் மத்தியில் எமது மாணவர்கள் கல்வி கற்பது பற்றியும் உங்களுக்குத் தெரியும்.

அவர்களது கல்வியை மீண்டும் கட்டியெழுப்ப புலம் பெயர்ந்த உங்களது ஆதரவு மிகவும் அத்தியாவசியமாகிறது என இலங்கை றோயல் இராசாயன (பட்டயவியலாளர்) கழக தலைவர் எஸ். பேராசிரியர் கூறினார்.

இலண்டனில் நடைபெற்ற புலோலி புற்றளை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கலை விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

இலண்டன் குரோயிடன் நகரில் அமைந்துள்ள சார்லி உயர்கல்வி மண்டபத்தில் நடைபெற்ற இக்கலை விழாவில் பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில். சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல நீங்கள் ஒவ்வொருவரும் சிறு ஆதரவு வழங்கினால் அது பெரும் நிதியாகி இலங்கையில் பல திட்டங்களை நிறைவேற்ற பெரும் உதவிபுரியும். எனவே பழைய மாணவர் சங்கங்கள் தமது பாடசாலைக்கு உதவி புரிவதோடு நின்று விடாது வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் ஆதரவு வழங்குதல் அவசியம். என்னை இந்த விழாவிற்கு அழைத்து கௌரவப் படுத்தியமையை நான் என்றும் மறக்க முடியாது.

இக் கௌரவம் முழுதாக என்னைப் புடம் போட்ட எனது ஆரம்ப பாடசாலையாகிய புற்றளை மகாவித்தியாலயத்தையே சாரும். புலோலிப் புகழை உலகெங்கும் பரப்பி வரும் இப் பாடசாலை மிகவும் உயர்ந்த நிலையில் உள்ளதற்கு முக்கிய காரணம் இப் பாடசாலையில் அதிபர்கள் ஆசிரியர்களாக பணியாற்றிய ஆசான்களின் அர்ப்பணிப்பான சேவையாகும்.

மேலும் நீங்கள் பாடசாலைக்கு நிதி உதவி புரிந்தும் எழை மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கொடுத்தும் உதவிகள் செய்து வருவது பாராட்டுதற்குரியது என்றார்.

தொடர்ந்து ரூட்டிங் நகரிலுள்ள ஹீமதி ராகினி ராஜகோபால் நாட்டியாலய நடன செழுங் கலைநிலைய மாணவிகளின் 'மகா கணபதியம்' என்னும் நடன நிகழ்ச்சியும் கராட்டிப் பயிற்சி காட்சியும் வாய்ப்பாட்டு வீணை இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்று இரவு விருந்துபசாரத்துடன் விழா நிறைவுபெற்றது.